ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2082/66 - 2018 අගෝස්තු මස 03 වැනි සිකුරාදා 2018.08.03

*2082/66 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 03 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

**ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்திற்காக காணியினை கைப்பற்றல்**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

*எனது இலக்கம்*: BD/BD/LND/3/5/14.
*காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சின் குறிப்பு இல.*: LD/05/2009/E/55.

கீழே விபரங்கள் குறிப்பிடப்பட்டுள்ள காணியானது பொதுமக்களின் நடவடிக்கைகளுக்கு அவசியமென்பதனையும், அக்காணியினை காணி எடுத்தல் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய காணி எடுத்தல் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தல் சட்டத்தின் 7ஆம் பிரிவில் (i) உப பிரிவின் கீழ் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்**

ஊவா மாகாணம், பதுளை மாவட்டத்தில், பதுளை பிரதேச செயலாளர் பிரிவில், ரில்பொல கோரளை சிறு பிரிவில், க்ளென எல்பின் (80H) கிராம உத்தியோகத்தர் பிரிவில், ரம்புக்பொத்த கிராமத்தில் அமைந்துள்ளதும், நில அளவைகள் நாயகத்திற்கு பதிலாக பதுளை மாவட்ட சிரேஷ்ட நில அளவைகள் அதிகாரியினால் தயாரிக்கப்பட்ட இறுதி கிராம வரைபட இலக்கம் 37, மேலதிக இலக்கம் 50, படிவ இலக்கம் 48 மற்றும் 2016.10.31 ஆந் திகதியிடப்பட்ட இறுதி கிராம வரைபடத்தின் 1.2044 ஹெக்டெயார் அளவிலான கீழே விபரங்கள குறிப்பிட ப்பட்டுள்ள காணித் துண்டுகள் மற்றும் எல்லைகள் அடங்கிய உப அட்டவணை-01.

**துண்டு இல.: *1068***

காணியின் பெயர்: அங்குருபிஸ்ஸகொட பத்தன எனும் க்ளென் எல்பின் தோட்டத்தின் ஹிங்குருகமுவபிரிவு; காணியின் விபரம்: வீட்டுத் தோட்டம், 15-20 வயது மதிக்கத்தக்க எகேஷியா மரங்கள் 06, 10-15 வயது மதிக்கத்தக்க அரசமரம், 10-15 வயது மதிக்கத்தக்க முருங்கை மரங்கள் 03, புத்த பீடம் மற்றும் நிரந்தரக் கட்டிடம் ஒன்றின் பகுதி; உரிமை கோருபவர்: காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு; ஆரம்ப உரிமைகோருபவர்: துண்டு இல. 546 இன் பகுதி, கொழும்பு 03, காலி வீதி, இல. 142/9, 1/1 எனும் முகவரியில் அமைந்துள்ள வரையறுக்கப்பட்ட பிலியன்ட்ஸ் (தனியார்) நிறுவனத்திற்கு நீண்டகால குத்தகைக்கு வழங்க அளவீடு செய்யப்பட்டுள்ளது; விஸ்தீரணம்: 1.1829 ஹெக்டயார்.

**துண்டு இல.: *1069***

காணியின் பெயர்: அங்குருபீஸ்ஸகொட பத்தன எனும் க்ளென் எல்பின் தோட்டத்தின் ஹிங்குருகமுவ; காணியின் விபரம்:



*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

புல்வெளி மற்றும் பற்றைக் காடு; உரிமை கோருபவர்: காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு; ஆரம்ப உரிமை கோருபவர்: துண்டு இல. 546 இன் பகுதி, கொழுப்பு 03, காலி வீதி, இல. 142/9, 1/1 எனும் முகவரியில் அமைந்துள்ள வரையறுக்கப்பட்ட பிலியன்ட்ஸ் காமன்ட்ஸ் (தனியார்) நிறுவனத்திற்கு நீண்டகால குத்தகைக்கு வழங்க அளவீடு செய்யப்பட்டுள்ளது. இரத்தினபுரி பாம் கார்டன் இல் பலாங்கொட பெருந்தோட்ட கம்பனியால் அனுமதியின்றி பயன்படுத்தப்பட்டு வருகின்றது; விஸ்தீரணம்: 0.0215 ஹெக்டயார்.

மேற்குறிப்பிடப்பட்டுள்ள காணிக்கு உரிமை கோருகின்ற அல்லது வேறு தொடர்புகளுடைய அனைவரும் தாமாக முன்வந்து அல்லது தமது கடிதம் மூலம் 2018.09.03 ஆந் திகதிய மு.ப. 10.30 மணிக்கு பதுளை பிரதேச செயலகத்தில் என்னை நேர்காணல் வேண்டும்.

மேலும் 2018.08.27 ஆந் திகதிக்கு முன்னர் இக்காணியின்/ காணிகள் தொடர்பாக உரிமைகளின் தன்மைகளையும் அக்காணிக்கு இழப்பீட்டினைப் பெற்றுக்கொள்வதற்கான காரணம் தொடர்பான விபரங்களையும், இழப்பீட்டுத் தொகை மற்றும் அத்தொகை கணிக்கப்பட்ட முறை தொடர்பாக இரு பிரதிகளிலான கடிதம் மூலம் எனக்கு அறிவிக்க வேண்டும்.

என்.எம்.ஞானவதி,
பிரதேச செயலாளர்,
பதுளை.

பிரதேச செயலகம்,
பதுளை,
2018, ஓகத்து 01.

08 - 691

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.